தோட்டத் தொழில் துரைகள்

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (26—9—49) ஐ வெளியீடு (27—9—49) [இதழ் 48

கொள்ளை இலாபம் அடிக்கும் கும்பல்

தன்னரசில் தன்மானம் வேண்டாமா?

தோட்டத் தொழிலாளர் வாழ்க்கை உயரவேண்டும்

" சித்திரச் சோலைகளே !
உமை நன்கு
திருத்த இப்பாரினிலே—
முன்னர்
எத்தனைத் தோழர்கள்
ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே"

* * *

எழில் மிகுந்த சோலையைக் கண்டதும், "என்னப்பன், சிவகாமி நாதன்—சிருஷ்டியின் சிங்காரத்தைப் பார்!" என்று, உருக்கமாக, பக்திப் பாசத்துடன் கூறிடுவர், மதமும் புலமையும் ஒருசேரக்கொண்டோர்.

இலக்கியச் செறிவும் இயற்கையின் இன்பத்தை நுகரும் பண்பும் பெற்றப் புலவர்களோ, சோலையின் எழிலைக் கண்டு சொக்கி, இயற்கையின் திறத்தின் முன் செயற்கை அழகு என் செயும்! எத்துணைக் கோடிப் பொன் கொட்டினாலும் இந்தச் சோலையின் அழகைப் போன்றதோர் வனப்பைப் பெறமுடியுமோ! என்றெல்லாம் பெருமூச்சுடன் பேசுவர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பார்க்கிறார், இதே சோலையை, சொக்கநாதனின் அருட்திறனே, இயற்கையின் கோலாகலமோ பற்றி அல்ல, அவர் மனதிலே தோன்றுவது.

சித்திரச் சோலைகளே!—என்று அழைக்கிறார் — ஒரு கேள்வி கேட்க!

அழகுடன் விளங்கும் சோலைகளே! இத்துணை அழகு பெற எங்ஙனம் முடிந்தது? யார் தந்தனர் இந்தத் திரு உருவை? என்று பலப்பல கேட்கத்தோன்றுகிறது கவிஞருக்கு. அவர் கண்முன்தோன்றும் சித்திரச்சோலை, ஒரு கணம் மறைகிறது—ஒரு வெட்டவெளி தெரிகிறது, வியர்வை பொழியப் பொழிய, பல பாட்டாளிகள், அங்கு பணிபுரியும் காட்சி தெரிகிறது. அதுவும் அடுத்த கணம் மறைகிறது, வெட்டவெளி இருந்த இடத்திலே கல்லும் முள்ளும் நிரம்பிய காட்டு நிலை தெரிகிறது, அந்தக் காட்டினைத் திருத்தக் கடுமையாக உழைக்கும் பாட்டாளிக் கூட்டம் தெரிகிறது!

மலர்—கனி—காய்— பிஞ்சு—தளிர் இவைகள் தெரியவில்லை—மக்கள், அவர்கள் படும்பாடு, அவர்கள் சிந்தும் வியர்வை—கொட்டும் இரத்தம், இவை தெரிகின்றன.

ஆம்! இந்த இரத்தத்தைப் பெற்றபிறகே, காடு திருத்தப்பட்டு, வெளியாகி, பிறகு, சோலையாகிக் காட்சி தருகிறது! இவ்வளவும் அவர் மனதிலே தோன்றுகிறது—உண்மை புலனாகிறது — உலகுக்கு இதனை உரைக்க வேண்டுமே என்ற ஆர்வம் பிறக்கிறது - எழிலைப் புகழ்வது சரி, ஆனால் அந்த எழிலைத்தந்தவர்களின் மாண்பினை மறப்பதோ! சோலைகளே! மக்கள் எழிலைக்கண்டு சொக்கி உண்மையை மறப்பர், நீ மறக்கலாமோ, கூறு உண்மையை,

" சித்திரசசோலைகளே !
உமை நன்கு
திருத்த இப்பாரினிலே—
முன்னர்
எத்தனைத் தோழர்கள்
ரத்தம் சொரிநதன
ரோ, உங்கள் வேரினிலே!

என்று பாடுகிறார் !

* * *

பாட்டாளியின் இரத்தம் தான் சோலையின் எழிலுக்கு மட்டுமல்ல, எழிலும் பயனும் மிகுந்த வயல், தோட்டம் ஆகியவற்றுக்கும், கொட்டப் பட்டிருக்கிறது. இந்த உண்மையை மறப்பதாலேயே உழைப்பாளிகளுக்குத் துரோகம் செய்யும், உலுத்தர்களின் பிடியில் உலகம் சிக்கிச் சீரழிகிறது.

* * *

சாலைகளும் சோலைகளும், உடைமைகளாகி விடுகின்றன சிலருக்கு—உழைப்பாளியின் இரத்தமும் வியர்வையும் ஊட்டப்பட்டு வளர்ந்த இவை பிறகு, உடைமைக்காரருக்கு பெருமையும் பூரிப்பும், இலாபமும் தரும் சாதனங்களாகி விடுகின்றன.

* * *

சாலைகள் சோலைகள், வயல்கள் ஆகியவற்றினால், முதலாளிகளுக்குக் கிடைக்கும் இலாபத்தைவிட அதிகமான அளவு இலாபம் கிடைக்கிறது, தோட்டங்கள் மூலம்—முக்கனி பயிரிடப்படும் தோட்டமல்ல-தேயிலை-காப்பி ரப்பர், இவை வளரும் தோட்டங்களில் பூந்தோட்டம், பழத் தோட்டம் ஆகியவைகளிலே தேவைப்படும் உழைப்பைவிட அதிகமான, கடுமையான, ஆபத்தான உழைப்பு தேவைப்படுகிறது, தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டங்களில். குன்றுகள், பள்ளத்தாக்குகள், கொடிய விஷ ஜந்துக்கள் உலவும் சிறு காடுகள், சகதியும் பிசுபிசுப்பும் நிரம்பிய இடங்கள், இவைகளே, இந்தத் தோட்டங்களின் பிறப்பிடமாகின்றன. பாட்டாளி எவ்வளவு, கஷ்டப்படவேண்டும், இவைதமைத் திருத்த — பயன்பெறக் கூடிய நிலையை உண்டாக்க, என் பதை எண்ணிப்பார்க்கள்.

கடனாளி

—

பிரிட்டன், அமெரிக்காவிடம் பெற்றுள்ள கடன், 1,214,250,000 பவுன்கள்.

"கடனபட்டார் நெஞ்சம்போல கலங்குகிறான லண்டன் வேநதன்" எனறு கவிபாடவேண்டும் போலிருக்கிறது.

இந்தக் கடன் சுமையைத் தாங்கிக்கொள்ளும் சக்தி, திருப்பிக் கொடுக்கும் திறமை, பிரிட்டனுக்கு உணடா என்பது தான், இப்போது உலகப் பொருளாதார நிபுணர்களின் மனதைக் குடையும் பிரச்சினை. பிரிட்டன், மிகமிகத் திறமையுடன நிலைமையைச் சமாளிக்க முயன்று வருகிறது. எனினும், கடனைத் தீர்தது விட்டு, நிம்மதியான நிலை பெற முடியுமா, என்பது, சந்தேகத்துக்குரியதுதான.

பிரிட்டனின், தாங்கும் சக்தி தகர்ந்துவிட்டது, என்பதன் அறிகுறிதான, ஸ்டார்லிங்கின் மதிப்பைக் குறைத்திருப்பது.

இதுமட்டும் போதாது-என்றே நிபுணர்கள் கூறுகின்றனர்.

தேயிலையும், காப்பியும், ரப்பரும் எவ்வளவு பாட்டாளியின் இரத்தத்தைக் குடித்து வளரும் பொருள்கள் என்பதுவிளங்கும். நெல்லும் கோதுமையும், பழமும் பிறவும் தரும் இலாபத்தைவிடப் பன்மடங்கு அதிகமான இலாபம்கிடைக்கிறது, தேயிலை, காப்பி, ரப்பர், ஆகிய பொருள்கள்மூலம். உழைப்பு கடினம்—ஆபத்து அதிகம் — இலாபம் அமோகம்! உழைப்பும் ஆபத்தும் பாட்டாளிக்கு — இலாபமும் இன்பமும் முதலாளிக்கு!

* * *

தோட்டத் தொழில் அதிபர்கள், பெரும்பாலும் துரைமார்கள்! தென்னாட்டிலும், வடநாட்டிலும், மலாய் நாட்டிலும், மற்றும் பல நாடுகளிலும், வெள்ளையரே, பெரும்பாலும், தோட்ட முதலாளிகள்—கொள்ளை இலாபம் அவர்களுக்கு — கொடிய நிலை தொழிலாளருக்கு—ஆலைத் தொழிலாளர் அளவுக்குக்கூட,

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

சொல்வதைச் செய்யும் வழக்கம் என்றேனும் உண்டா?

பட்டாபியின் பரிதாபக்குரல்

ரூபாய் மதிப்பைக் குறைத்துவிட்டபடியால், சாமான்களின் விலைவாசிகள் உயரவே உயராது என்று கூறினார் இந்திய முதலமைச்சர். ஆனால், அவ்வார்த்தைக்கும் காட்டு நடப்புக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை. அமெரிக்கச் சாமான்கள் மட்டுமல்ல, வெளிநாடுகளில் இருந்து வரும் சாமான்கள், உள்நாட்டுச் சாமான்கள் ஆகிய எல்லாப் பொருள்களுமே திடீரென விலை ஏறி, வர்த்தகர்களால் பொதுமக்கள் சுரண்டப்படுகின்றனர்.

இந்நிலை கண்டு சகிக்க முடியாத தோழர் பட்டாபி சீதாராமையா, "இந்தப் பிரச்சினைகளை வெட்டுச் சுரைக்காய்ப் பரிகாரங்களால் தீர்க்க முடியாது. அமெரிக்கப் பொருள்கள் தவிர மற்றவை விலை உயராது என்று அரசாங்கம் அளித்த வாக்குறுதி காற்றில் பறந்தது. விலைவாசிகள் கடும் விஷமேறுவது போல ஏறிவிட்டன. அரசாங்கம் ஓர் அவசரச் சட்டம் இயற்றி, விசேஷ மாஜிஸ்ட்ரேட்டுகளை நியமித்து, கொள்ளை லாபக்காரர்களை நடுத்தெருவில் நிற்கவைத்துச் சவுக்கடி கொடுக்கச் செய்திருக்க வேண்டும்."

என்று கூறியுள்ளனர். மக்கள் நிலை பற்றிய கவலையுள்ளவர்களுக்கல்லவா இந்த யோசனைகள் வேண்டும். எட்டிலே திட்டம் தீட்டி, நாட்டு மக்களிடையே அதைக் காட்டிக் காட்டிப் பேசி, மயக்கி ஓட் வாங்கி, தங்கள் பதவிகளைக் காத்துக் கொள்வதொன்றைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவர்களுக்கு ஆலோசனைகள் ஏன்? வாக்கை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் காங்கிரஸ்காரர்களுக்கு என்றாவது இருந்ததுண்டா? தேர்தல் காலவாக்குறுதிகள் இன்று காற்றில் பறக்கப்படவில்லையா? சொல்வதைச் செய்துகாட்டும் வழக்கம் இல்லாதவர்களிடம் என்ன சொல்லியும் பயன் என்ன விளையப் போகிறது? ராஷ்டிரபதி தோழர் பட்டாபி தம் தோழர்கள் போக்கைக் கண்டு வருந்தாவிடினும் பரிதாபக் கூக்குரலிடுவதைக் கண்டு உண்மையிலேயே நாம் இரக்கப்படுகின்றோம்.

இன்று நடக்கும் பொறுப்பாட்சி

—

அதிகார மோகத்தில் ஆழ்ந்து கிடக்கிறது

—

"இப்பொழுது நடைபெறும் பொறுப்பாட்சியில், பதவியைச் சேவைக்கான சாதனமாகக் கருதுதற்குப்பதில் சுயநலத்திற்காகவும், அதிகாரப் பெருமைக்காகவும், அதை ஒரு சாதனமாகக் கருதும் போக்கு இருந்து வருகிறது. சில மாகாணங்களிலுள்ள பூசல்களுக்கு இதுதான் காரணம்"

என்று அகில இந்திய காங்கிரஸ் மகாசபைத் தலைவர் ராஷ்டிரபதி தோழர் பட்டாபி சீதாராமையா டில்லியில் கூறினார். தோழர் பட்டாபி, பதவியிலுள்ளவர்களை உண்மையான உருவில் படம் பிடித்துக் காட்டுகிறார்.

காட்டின் நிலை, நாட்டில் ஏற்பட்டுக் கிடக்கும் ஊழல்கள், பூசல்கள், வெறுப்புணர்ச்சிகள், இவையாவற்றுக்கும் காரணம், பதவிப் பொறுப்பு அதிகாரமோகத்தில் ஆழ்ந்து போய் விட்டதுதான் என்பதில் சற்றும் ஐயமில்லை.

மக்கள் சேவை, நாட்டுத் தொண்டு என்பவை பொறுப்பாட்சி செய்ய வந்தோரின் மனத்தில் சிறிதளவேனும் இருந்தால் நிலைமை நாளுக்கு நாள் சீர்கேடு அடையாது அல்லவா? ஆனால் தோழர் பட்டாபியின் அறிவுரை காட்டில் வீசும் மலர் மணம் போன்றதாக ஆகிறதே ஒழிய, ஏற்றுப் பணியாற்றுவோர் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை.

—

சர்விஸ் கமிஷன்களின் திறமை

—

"திறமையற்றவர்களைத் தேர்ந்தெடுப்பதில்தான் இந்த நாட்டுச் சர்விஸ் கமிஷன்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. அதற்கு எவ்வளவு உதாரணங்கள் வேண்டுமானாலும் கூறுவேன் என்கிறார் சர் சி. வி. இராமன் கோவையில். அரசாங்கத்தின் திறமை எந்த அளவில் இருக்கிறது என்பது சர் சி. வி. இராமன் பேச்சிலிருந்தேனும் புரிகிறதா?

மாலை மணி

சென்னை 26—9—49 திங்கட்கிழமை

கோவையாரின் எக்களிப்பும்-எச்சரிக்கையும்

"தமிழ்நாட்டில, தமிழ் முதன்மை மொழியாக இருப்பதை நீக்கிவிட்டு. இந்தியையே முதன்மை மொழியாக்கிவிட, ஏதாவது முயற்சி நடக்குமானல், தமிழ்நாடு தனது முழு ஆற்றலையும கொண்டு அதை எதிர்த்தே தீரும். இந்தியை முதன்மை மொழியாகத் தமிழ் நாட்டின மீது திணிக்கப்படுமானல், தமிழ்நாடு இந்திய யூனியனிலிருந்து விலகிக் கொள்ளுமேயன்றி அதற்கு ஒருக்காலும சமமதித்துவிடாது"

என்ற முழக்கம, நம்மையறியாது நம் செவியில் விழக் கண்டோம்; கேட்டோம்; உளமெலாம சிலிர்த்தது இன்ப உணர்வால்! நம்மனோரிடத்திருந்தே வரக்கூடியமுழக்கம, நம்மையும அறியாமல், நாமும எதிர்பார்க்காமல், நமமுடைய செவிகளில் இனிமையாக வநது புகுவது என்றல, அது வியப்பைத்தானே கிளறிவிடும்! வியப்புணர்வால் ஓசை வநத பக்கம திரும்பினேம்! கோவையிலிருந்து எழுபக் கண்டோம! எநதத் தமிழன் விழிப்புணர்ச்சிகொண்டு, வீறுபெறறெழுந்து, இவ்வாறு வீரமுழக்கமிடுகிறுன, என்பதைக் காண துடிதுடித்தது நின்ற ஆவல, முழக்கமிடுவது அரசியல அறிஞன ஆர். கே சணமுகம்தான என்று கண்டறிநது, களிநடனம புரியக் கணடோம்! களிபெரு மகிழ்ச்சி வெள்ளம கரைபுரண்டு ஓடிற்று!

* * *

கோவை உயர்நிலைப்பள்ளி ஒன்றின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் பேசும் போதுதான், தோழர் ஆர் கே. சணமுகம அவர்கள், மேற்கண்டவாறு மொழிநதுள்ளார்கள். அவருடைய அநதப் பேசசை மாணவர்களும, ஆசிரியர்களும, நகர மககளும் கேட்கும வாயப்பைப் பெற்றுர்கள் எனபதுமட்டுமல்லாமல, முன்னுள - இந்நாள் கல்வியமைச்சர்கள் இருவரும், கேட்ககூடிய நிலையில அங்கு வீற்றிருநதனர், என்று அறியும்போது, உள்ளபடியேமகிழ வேண்டியவர்களாக இருக்கிறேம.

தோழர் சண்முகத்தின் சொறகளிலே புதைந்துகிடக்கும பொருளகளைவிட, அவற்றிடையே பின்னிக்கிடக்கும உணர்ச்சியின் அளவைக்காண வேண்டுகிறேம.

தமிழ்நாடு தனது முழு ஆற்றலையும கொண்டு எதிர்த்தே தீரும்.

தமிழ்நாடு இந்திய யூனியனிலிருந்து விலகிக்கொண்டாலும விலகிக்கொளளும.

இந்த இரண்டு சொற்றெருடர்களும், தோழர் சண்முகம அவர்கள் வாயினின்றும் வெளிப்படும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது, அவருடைய அணமைககாலச் சொற்பொழிவுகளையும, கூற்றுக்களையும, மனதில கொண்டு வந்துபார்க்கும்போது இந்திய யூனியனில் நிதி மந்திரியாக இருநதவர்-காங்கிரஸ்மொழிக் கொள்கைக்கு ஆதரவு காட்டி வந்தவர்-பலமுள்ள மத்திய சர்ககார் (Strong Centre) வேண்டும் என்று வாதிட்டவர்-மாகாணப்பிரிவு கூடாது என்று வெறுததவர்-நாட்டுப் பிரிவினை கேடுபயககும் என்று அணமைக் காலங்களில போதித்து வந்தவர்-அப்படிப்பட்டவர் இப்படியெல்லாம் கூறுகிருர் என்றல, அதற்கு அடிப்படைக் காரணம் என்னவாக இருக்கமுடியும? தோழர் சண்முகம போன்ற அறிஞர்களிடத்திருந்து மனமாற்றக் கருததுக்கள வருகின்றன வென்றல் காரணம் எதுவும் இல்லாமல் இருக்க முடியுமா? இல்லாமல் இருக்க முடியாது! அவசியம் இருககத்தான வேணடும்!

இந்தி மொழி ஏகாதிபத்ய தோற்றமும் — அதைத் தோற்றுவிக்க இந்தி மொழி வெறியர்கள் கையாணட போககும், கைக்கொள்ளப போகும போக்கும் — அநத ஏகாதிபத்ய வெறிச் செயலுககு இநதிய யூனியன் அரசாங்கம் அடங்கி நடக்கும தன்மையும், சாதுவாக இருநத சணமுகத்தைச் சமர்ககளத்திற்கு இழுத்துவந்துவிட்டன, என்றுதான சொல்லவேண்டும்.

இந்தி மொழி வெறியர்களின் தூணடுதலும், அதற்குத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் பணிந்துவிடுதலும் ஆகிய நிலைமை, தமிழின் முதனமையைப் போக்கி, இந்தியின் முதன்மையைப் புகுத்திவிடவும கூடும்—அதற்கான முயற்சி நடைபெறவும் கூடும் என்று எதிர்பார்த்து, அதன் விளைவு தமிழ் மொழியின் அழிவாகததான இருகக முடியும என்று உணர்கிருர் சணமுகம்-உணர்ந்து, தன்னையும மீறி, உணமை உள்ளுணர்ச்சி தூண்ட, எக்காளமிடுகிருர், "**ஏதாவது முயற்சி நடக்குமானல், தமிழ்நாடு தனது முழு ஆற்றலையும் கொண்டு அதை எதிர்த்தேதீரும்**" என்று. **தமிழ்மொழி அழிந்து பட்டால், தமிழர்பண்பாடு அனைத்தும் அழிந்து படும்: தமிழர் பண்பாடு அழிந்து பட்டால்,** தமிழ் நாட்டை உருத்தெரியாமல போய விடும்; தமிழ் நாடு வாழ வேண்டுமாயின், தமிழர் பணபாடு காப்பாற்றப்பட வேண்டும்: தமிழர் பணபாடு காப்பாற்றபபட வேண்டுமாயின் தமிழ் மொழி பாதுகாக்கப்பட வேண்டும்; இவையெலலாம் காபபாற்றபபட வேண்டுமாயின இவற்றை அழுதத்தி வைககும பிடி அகற்றபபட வேணடும என்ற உணர்வு அலைகள அவர் உளளததிலே ஊடுருவிப் பாய்ந்திருககின்றன; ஆகவேதான் தாய்மொழிப் பற்றுணர்ச்சியால உநதப்பட்ட தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் அடுத்து எககாளமிடுகிருர்,

"இந்தி முதன்மைமொழியாகத் தமிழ் நாட்டின மீது திணிக்கப்படுமானல், தமிழ் நாடு இந்திய யூனியனிலிருந்து விலகிக் கொணடாலும விலகிக் கொள்ளுமேயலலாமல, அதற்கு ஒருககாலும சமமதிதது விடாது" என்று.

மொழிப் பிரச்சினையைப் பொறுதது வட இந்தியத் தலைவர்கள கையாளும போககு, தோழர் டி. ஏ, இராமலிங்கனர் போன்றவர்களுடையவும, ஆர். கே சண்முகம போன்றவர் களுடையவுமான உள்ளுணர்சசிகளை எநத அளவுககுப பாதித்திருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இவர்கள் உணர்கிருர்கள்; உணர்ந்ததை வெளியில எடுததுச் சொல்ல சிறிதளவு தைரியமும கொள்கிருர்கள்; ஆகவேதான் இவர்களது உள்ளக்கிடக்கை வெளியில இனிது தெரிய ஏதுவாகின்றது. இவர்கள் போல உள்ளத்திலே கொண்டவர்கள, ஆனல், வெளியில் உளளதை எடுத்துச் சொலல அஞ்சுபவர்கள ஏராளமாக இருககிருர்கள். இன்னும் உணராமலே இருந்து வருகிற சோணகிரிகளும் உணடு. நாட்டுக்குக கேடு பயபபன என்று இவர்கள் சொல்வதைச் சற்று அழுததமாக, இன்னும் கொஞ்சம் தெளிவாக நாம எடுததுக கூறும்போதெல்லாம், நாம் கூறுகிறேம் என்ற ஒரே காரணத்திற்காகப் பலரும், நமது கூற்றுக்களை அலட்சியப் படுத்தினர். கேடு பயக்கும ஒன்றை எதிர்த்துப் போராட நாம துணிந்தபோது, இன்று 'அங்கலாய்க்கும்' பலரும் ஆதரவு தந்திருப்பின், தமிழகத்தின்- திராவிடத்தின் நிலை இவ்வளவு சீர்கேட்டிற்கு வந்திருக்காது.

அவசியமில்லாத- பயன் கொடுக்காத- நலன்பயக்காத- மாருக அழிவைப் பயக்கும் இந்தி வேண்டாம் என்று, நம்மனோர் கூறியபொழுது, கேலியும, கிண்டலும் செயது, நம்மை இழித்தும், பழித்தும் கூறிய காங்கிரஸ்காரர்களும், ஏனையோரும், காங்கிரசாட்சியின் முன்னுள் நிதி அமைச்சர்-கோவைக்கோமான்- அரசியல் அறிஞர் - பொருளாதார நிபுணர்- ஆர். கே, சண்முகம் அவர்களின் சூளுரைச் சொற்களைக் கேட்ட பிறகாவது, மனந்திருந்துவார்களா, என்ற நல்ல எண்ணத்தின்பேரில், சூளுரைகளை மக்கள்முன் காணிக்கையாக வைக்கிறேம். கோவையாரின் எக்களிப்பும்-எச்சரிக்கையும் தமிழகத்தின்-திராவிடத்தின் திக்கெட்டும் கேட்கட்டும்! இதுவரையிலும் இருந்தா டினாயும் திருந்தட்டும்!

கிளைக் கழகம் :: அமைக்கும் முறை

திராவிட முன்னேற்றக் கழகத்திலே பற்றுதல் கொண்டுள்ள தோழர்கள் ஒவ்வொருவரும், நான்கணு உறுப்பினர் கட்டணம் செலுத்தி, உறுப்பினர் உரிமைச் சீட்டு (சந்தா ரசீது) பெற்றுக, தஙகளைக் கழக உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ளவேண்டும். 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும உறுப்பினராகலாம்.

திராவிட முன்னேற்றக் கழகமல்லாத பிற கழகங்கள், திராவிட முன்னேற்றக் கழகமாகத் தங்களை மாற்றிக்கொள்ள விரும்பினல், தீர்மான நிறைவேற்றத்தின் மூலம். கழகப் பெயர்-போக்கு- நடவடிக்கைகள் எல்லாவற்றையும் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரில் மாற்றிக்கொள்ளலாம். மாற்றிக்கொண்டானவுடனே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களாக ஒவ்வொருவரும் தங்களைப் பதிவு செய்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஏற்றமுறையில், செயற்குழுவை அமைத்துக் கொள்ள வேண்டும்.

கழகம புதிதாகத் துவக்கப்படவேண்டிய அவசியமுள்ள இடஙகளில, பதிவு செய்துகொண்ட உறுப்பினர்கள் ஒன்றுகூடி. செயற்குழு ஒன்றினை ஏற்படுததிககொளள வேணடும்.

செயற்குழு-செயலாளர், துணைச் செயலாளர், நிதி உறுப்பினர், விளம்பர உறுப்பினர் ஆகிய நால்வரும், மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலுறுப்பினர்களும் அடங்கியதாக இருக்கவேண்டும்.

செயலாளரை முதன்மையாகக் கொண்டே கிளைக் கழகம் இயங்கவேணடும.

முக்கிய பிரசசினைகளைச் செயற்குழு கூடி முடிவு செயய வேண்டும.

கிளைக் கழகத்தின் நடவடிக்கைகளை அவ்வப்போது, தலைமைக் கழக அலுவலகப் பொறுப்பாளருக்கு அறிவிததுக்கொணடே யிருக்கவேணடும்.

விளம்பரஞ் செய்யவேண்டிய செய்திகளை "மாலை மணி" இதழுக்கு அனுப்பிவைகக வேண்டும்.

ஜில்லாக் கழகங்கள், கிளைக் கழகங்கள் அமைந்த பிறகே அமைக்கப்படவேண்டியிருபபதால், உறுப்பினர் சந்தாவில 2 அணுவைக் கிளைக் கழகததிற்கு வைத்துக்கொணடு, மீதி 2 அணுவைத் தலைமைக கழகத்திற்கு அனுபபிவைக்க வேண்டும்.

ஜில்லாக் கழகங்கள் அமைந்த பிறகு அவற்றிற்குச சேரவேண்டிய தொகை பினனல் அனுப்பிவைக்கப்படும்.

மேற்கண்ட முறையில், ஆங்காங்கு, "திராவிட முனனேற்றக் கழகம்............நகரக் கிளை" என்றும், "திராவிட முன்னேறறக் கழகம் ....சிற்றூர் (கிராமம்) கிளை" என்றும பெயரிட்டுக் கொண்டு, கிளைக் கழகங்களை, விரைவில (16—10—49-க்குள்) அமைக்கும்படி அன்பர்களைக் கேட்டுககொள்கிறேன்.

சி. என். அண்ணுதுரை
பொதுச் செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகம்

புதுப்பட்டி கிளை

புதுப்பட்டி, செப். 22— தோழர் ஆர். கே. கே. சாமி தலைமையில் 22-9-49ம் நாள காலை 9-30 மணிக்குத் தோழர் பி. முத்துக் கிளியவர்கள் முடி திருத்தும் நிலையத்தில், கழகத தேர்தல் கூட்டம் நடை பெற்றது. தோழர் எ. ரத்தினம் அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த தோழர் ஆர். கே. கே. சாமி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், நிர்வாகிகள், தொண்டர்கள் கடமை பற்றியும் பேசினர். நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது. (ஒ-கி)

பாரதி விழா

சத்தியவேடு, செப். 19— இன்று மாலை 6-மணிக்கு இவ்வூர் மாவட்டக் கழக உயர்நிலைப் பளளியில், தோழர ஈ. வேணுகோபால் தலைமையில் பாரதி விழா கொண்டாடப்பட்டது. தோழர் டி. புருஷோத்தமன் பாரதி படத்தைத் திறந்து வைத்தார். தோழர் வ. நரசிமமலு, வித்வான் ப. சேதுராமன் ஆகியோர் பேசினர். அமைச்சர் தோழர் சிவசாமி நன்றி கூற விழா முடிந்தது. (ஒ. கி.)

செங்குந்தர் தொடக்கப் பள்ளி ஆரம்பவிழா

அருப்புக்கோட்டை, செப். 18— இன்று மாலை 5 மணிக்கு நகராண்மைக் கழகத் தலைவர், தோழர். எம். டி. இராமசாமி அவர்கள் தலைமையில் விழா துவங்கியது. மாணவ, மாணவிகளின் பாடல்களுக்குப் பின் தோழர்கள் . சுப்பிரமணியம், ஓச்சா, டி. கே. சுப்பிரமணியம், கே. இராமச்சந்திரன், எஸ். தேவஸ்யா, எம். எஸ். இராமசாமி ஆகியோர் பேசினர். மாணவிகளால் "[illegible]" நாடகம் நடிக்கப்பட்டது. செயலாளர் நன்றி கூற விழா முடிந்தது (ஒ. கி.)

சாகாவரம் பெற்றுவிட்ட சுராஜ்-உத்-தௌலா!

வங்கத்தில் பவனி வரும் விந்தை!

மாணவர்களை மாக்களாகக் கருதும் மிருகசுபாவம்!

காட்டு நீதி கண்டு கண்கலங்கிய நீதிபதி

உரிமை வேட்கையினர் அயர்ந்துறங்கும் அலங்கோலம்!

18-ம் நூற்றாண்டு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு அடிகோலப்பட்ட சந்தர்ப்பம். மக்களின் மதி மதத்தரகர்களின் மயக்க வார்த்தைகளில் சிக்கிக் கிடந்த நேரம். எவர் ஆண்டால் என்ன என்ற அளவிற்கு, அரசியல் அறிவு சூன்யம், மக்களைப் பிடித்துக்கொண்டிருந்த காலம்.

மக்களை மதித்து நடக்க வேண்டுமென்ற மகத்தானப் பண்பாடு, முடிதாங்கிய மன்னோன் மத்தர்களின் மனதில், இடம் பெற்றிருக்கமுடியாதச் சூழ்நிலை அன்று இருந்தது. காலத்தைக் கருதும்போது, காவலன் கருத்திலே, மக்களைப் பொருட்படுத்தாத மூர்க்கத்தனம் குடிபுகுந்திருந்ததை மன்னித்துக்கூட விட்டு விடலாம். மக்கள் உயிர் எல்லா உயிர்களினும் சிறந்தது என்ற கோட்பாட்டை, அதிலும் எதிர்த்துப் போரிட்டப்படைகள் புறமுதுகிட்டுச் சிறைப்பட்டபோது, அந்த அடிமைகளை வீணர்கள் என்று மதிக்காது, மாவீரகளென்றே மதித்து மரியாதைக் காட்டுவதுதான் மாண்புடையது என்ற உயர்ந்தப் போக்கை, 1756-ம் ஆண்டில், கொலு வீற்றிருந்தக்கோமான்களிடம் எதிர்பார்ப்பதும் வீண்தான்.

நாட்டை, நகரங்களை, தனது ஏற்றத்தை, தனது சுகத்தைச் சூறையாட வந்தச் சுரண்டல்காரர்கள், தோல்வியுற்றுக் கையில் சிக்கினால், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த முடிதரித்தவன், மனித மேம்பாட்டை மறந்து, நன்னெறியைத் துறந்து, துன்புறுத்தத் தான் முனைவான், அடிமைபட்ட எதிரிகளை. இதோபதேசம், எந்தப் பயனையும் அளிக்காத அந்த நேரத்தில். நிலைமைக் கேற்ற நினைப்புக் கொள்ளுகிறது இயற்கை, கொற்றவனும் சரி வேறும் மற்றவர்களும் சரி!

ஹாலவெல் என்ற முக்கிய ஆங்கிலேயன் உள்பட 146 வெள்ளையர்கள், வங்காள நவாபான சுராஜ்-உத்-தௌலாவிடம் சிக்கிக் கொண்டனர். அக்கூட்டத்தில் சில ஆங்கிலப் பெண்களும் இருந்தனர். காற்றோட்டமில்லாத அறை-இருபது அடிகள்தான் நீள அகலத்தில். காலில் ஒரு பகுதியினாகூட அந்த அறையில் தங்கிஇருக்க முடியாது. 146 ஆங்கிலேயாகள், ஓர் இரவு முழுதும், அந்த அறையில் அடைக்கப்பட்டிருந்தனர். காலையில் கண்டது என்ன? இருபத்தி மூன்று ஆங்கிலேயர்கள் — ஒரு பெண் உட்பட—உயிரோடு குற்றுயிரும் கொலையுயிருமாகக் காட்சியளித்தனர். நவாப் இதற்குப் பொறுப்பாளி அல்ல; அவர் சிப்பந்திகள் புரிந்த சித்திரவதை இது. ஏவலர்கள் இழைத்த இக்கொடுமைக்கு, நவாப் உடந்தையாக இல்லையானாலும், இந்தக் கொடும் சம்பவத்திற்காக, மனம் வருந்தி, நான்கு வார்த்தைக் கூறவில்லை. இந்தவழிஞல் மாசு, மன்னனைச் சேர்ந்தது. துடைக்க முடியாத நிலையில் ஏடுகளில் [illegible]டன. "கல்கத்தா இருட்டறை" இந்திய [illegible]த்திலே, என்றென்றும் [illegible] முடியாத அளவில் கறை [illegible]ருக்கும் கட்ட[illegible] வலாத்துப் புகழ்[illegible] உண்டு.

கல்கத்தா இருட்டறையின் [illegible] பண்பாடு—18-ம் நூற்றாண்டோடு நின்றுவிடவில்லை. மேலும் தொடருகிறது — இன்றும் நம் கண்களுக்கு முன் நிகழ்ந்துகொண்டு இருக்கிறது. சுராஜ்—உத்—தௌலா, இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னா, எழுந்து உலாவுகிறார் வங்காளத்தில் என்றால், அனைவருக்கும் ஆச்சரியத்தைத்தான் கொடுக்கும்.

ஆம்! சுராஜ்-உத்-தௌலாவின் கல்லறையிலிருந்து, கணீல்கணீல் என்று சிரிப்பொலி கிளம்பத்தான் செய்கிறது. அது குறித்துக்காட்டுவது கேலியா—கிண்டலா-நாம் அறியோம். இருபதாம் நூற்றாண்டில்- 1949-ம் ஆண்டில், அதுவும் சில நாட்களுக்கு முன், சுராஜ்—உத்—தௌலா வங்காளத்தில் பவனி வருவது என்றால், எவருக்கும் திகைப்பை உண்டாக்கக்கூடியச் சம்பவமாகத்தானே தோன்றக்கூடும்!

காங்கிரஸ் ஆளவந்தார்களின் ஆட்சி, வங்காளத்தில், கல்கத்தா இருட்டறையைத் தோற்கடித்துவிடும் போக்கில் நடந்து கொண்டிருக்கிறது.

30 நபர்களுக்குத்தான் இடமுண்டு, அந்தப் போலீஸ் மோட்டார் வானில். அதில், 40 நபர்களைப் போட்டு அடைத்தார் ஒரு போலீஸ் அதிகாரி!

இவர்கள் யார் என்று கருதுகிறீர்கள்? கள்ள மார்க்கெட் கழுகுகளா? இல்லை! பங்கீட்டு உணவுகளைப் பதுக்கி மக்களைப் பட்டினிப் போட்டுக் கொல்லும் பாதகர்களா? இல்லை! நூற்றுக்கு ஐந்தாறு என வட்டி வாங்கி மக்களைத் துன்புறுத்தும் கருணை மூர்த்திகளா? இல்லை! கன்னக்கோல் கள்வர்களா? கிடையாது! கள்ளச் சாராயம் காய்ச்சிக் காசு திரட்டிய குணாளர்களா? கிடையாது! கத்தியும் கையுமாகத் திரிந்த காலிகளா? கிடையாது!

பின் யார் என்று கருதுகிறீர்கள், சிறு மோட்டார் வானில் அடைக்கப்பட்ட நபர்கள்? குற்றப் பரம்பரையினர் அல்ல — மாணவர்கள் — அதிலும் பல்கலைக் கழக மாணவர்கள். நேர் மதியாளர்கள் — துன்பத்தைத் துடைக்கத் துடிதுடிக்கும் இளம் காளைகள். எதிர்காலத்தில் பாராளும் பொறுப்பேற்கும் நிலையில் உள்ளவர்கள். நாட்டுக்கு நற்காவல் புரிய, தினவெடுக்கும் திண்தோள்கள் பெற்றுள்ள திடதேகிகள். அவர்களுக்கு இந்தவிதம்—அரசாங்க உபசாரம் —அதிலும் அகிம்சா மூர்த்திகளின் தர்ம ராஜ்யத்தில்!

'நீர்'—'நீர்'—'சாகிறோம்'—'நா வரட்சி நீங்கத் தண்ணீர்' 'தண்ணீர்!' இப்படிக் கூச்சல் கிளம்பிற்றுக் கூச்சல், அந்தப் போலீஸ் வானில் இருந்து! நீதி சபை வெளியில்கூடி யிருந்த மக்களின் காதுகளைத் துளைத்தது இக் கூச்சல்! நாற்காலியிலே வீற்றிருந்த மாஜிஸ்ட்ரேட்டுகள் செவிகளில், நாராசமென நுழைந்தன இக்கதறல் ஒலி! பிரதம பிரிசிடென்சி மாஜிஸ்ட்ரேட் ஓடிவந்தார், 'நீர் நீர்' என்ற சத்தம் எழுந்த இடம் நோக்கி 'சாகிறோம்! தண்ணீர்! என்று குரல் கிளம்பிய, போலீஸ் வானை அடைந்தார், அவர்! போலீஸ் வானைச் சுற்றிச் சுற்றி வந்தார் நீதிபதி! பூட்டைத் திறக்கத் திறவு கோல இல்லை நீதிபதியிடம்! என்னசெய்வார், பாபம், நீதிபதி! திரு திரு என்று விழித்தார்! கடமை உணர்ச்சியால்— இரக்கச் சிந்தையால துடி துடித்தார்! கடைசியில், முயன்று (after some effort) முயன்று பூட்டைத் திறந்தார்! அவர் கண்ட தென்ன?

ஆளவந்தார்கள் மீது அதிருப்தி ஏறபட—போலீஸ் அதிகாரிகள் மீது பழி சுமத்த-நீதிபதிகளின் கருத்தையும்கவனத்தையும்கவர -வானிலே அடைபட்டுக்கிடந்த மாணவர்கள், 'நீர்—நீர்—சாகிறோம்!' என்று தந்திரம்செய்தார்கள் என்றுகருதுகிறீர்களா? இந்த முறையில தானே, ஆளவந்தார்களுக்கு எதிராகச் செய்யப்படும் கிளர்ச்சிகளில் சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் விகாரப்படுத்திக் காட்டுகிறார்கள், ஆளவந்தார்களும அவர்களின் ஆதரவாளர்களும்!

'நீர்நீர்!' என்று கத்திக்கூவின மாணவர்கள் எந்த நிலையில் இருந்தார்கள்? மாணவர்களை வெளியே கொண்டு வந்த பொழுது பெரும்பாலோர் சோர்வுற்றும், ஐவர் மூர்ச்சையற்றும் இருந்தனர். ('When brought out many of the Students were found in a state of exhaustion & five were unconscious') இந்த மயிர்க் கூச்செறியும காட்சியை, மனம் பதறச்செய்யும் கோலத்தை, கல்மனத்தையும் கரையச் செய்யும் கொடும் நிகழ்ச்சியைக் கண்டது யார்? நீதிபதி-அதுவும் பிரதம பிரிசிடென்சி மாஜிஸ்ட்ரேட்!—நான்கு பணத்திற்குப் பொய் சாட்சிக் கூறத்தயாராக இருக்கும் மனிதப் பதர் அல்ல!

சோர்வுற்ற மக்களை-மாணவர்களை - தம உணர்விழந்தஐவரைக் காண நேர்ந்த நீதிபதியின் விழிகள், கண்ணீர்த்துளிகளையா சிந்தி இருக்கும் என்று கருதுகிறீர்கள்? இல்லை — செந்நீர்த்துளிகளையல்லவா சிந்தி இருக்கும்! இருதயம் எரிமலையாகவன்றோ மாறி இருக்கும் நீதிபதிக்கு!

இந்தக் கொலைவினைக்கு, மாணவர்களைத் துன்புறுத்தியத் துடுக்குத்தனத்திற்கு, ஜீவகாருண்யம் துளியும் அற்ற இந்தச் சித்திரவதைக்கு, எவர் பொறுப்பாளி—என்ன காரணம்—என்பனவற்றை ஆராய்ந்து அறிய, கல்கத்தா பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட்டும் போலீஸ் கமிஷனரும்ஒருவிசாரணைக்குழுவை நியமித்து இருக்கிறார்கள். நன்று செய்தார்கள்! நல்ல தீர்ப்புக் கிடைக்கட்டும்!

மேற்கு வங்க சர்க்காரும், இந்த அக்கிரமச் செயலுக்குப் பொறுப்பாளி என்று ஒரு ஸப் இன்ஸ்பெக்டர் மீது குற்றம் சாட்டி, அலுவல் முறைத தண்டனை அளித்துள்ளதாம்!

இந்தக் கொடுஞ்செயலுக்குப் போலீஸ் ஸப்இன்ஸ்பெக்டரே முழுதும் பொறுப்பேற்கத் தகுந்தவர் என்று வங்க சர்க்கார் கூறுவது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், சர்க்காரின் முழு கடமையும் இத்துடன் தீர்ந்து விட்டதாகுமா? நிகழ்ந்துள்ள சம்பவம் சர்வ சாதாரணமானதல்ல. மாணவர்களின் உயிர் போக்கும், ஈவு இரக்க மற்ற படுபாதகமாகும். பேச்சு மூச்சற்ற ஐவரும், பிணமாகி இருந்தால், அதன் விளைவாகக் கிளம்பும் பெரும் பழிச் சொல்ஆளவந்தார்களைத் தாக்கத் தானே செய்யும்? எனவே, போதாது போதாது, வங்க சர்க்கார் மேற் கொண்டுள்ள பரிகாரமுறை!

மக்களை—அதுவும் படித்த மாணவர்களை-மாக்களை நடத்துவது போல, ஆடுமாடுகளைச் சிறு கொட்டிலில அடைத்துப் போடுவது போல, ஒரு போலீஸ் வானில அடைத்துப் போடலாம் என்ற துணிவு-முனைப்பு, இருந்தாப்போல இருந்து ஒரு சாதாரணமான இன்ஸ்பெக்டருக்கு வந்து விட்டிருக்க முடியாது. பல நாள் பயிற்சியாக இருந்திருக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், ஆளவந்தார்களின் அடிப்படை மனோபாவத்தை, எதிர்க்கட்சியினா மீது ஆளவந்தாகள் கொண்டிருக்கும்எரியுள்ளத்தை, எதற்கெடுத்தாலும் அடக்குமுறையை ஆய்ந்தோய்ந்து பாராமல் அவிழ்த்து விட்டு அகமகிழும் ஆளவந்தார்களின் அழுகிய இருதயத்தை, நன்கு அந்த ஸப இன்ஸ்பெக்டர் போன்ற போலீஸ் அதிகாரிகள் அறிந்திருப்பதே, இந்த மிருகச் செயலுக்குப் பெரிதும் காரணமாக இருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை.

இது போன்ற விஷயங்களில, ஆளவந்தார்களுக்கு மனமாற்றம, புரட்சிகரமான போக்கில் மாறுதல் அடைந்தாலன்றி, அவாகள் ஏவல்வழி நிற்கக் கடமைப்பட்டுள்ளச் சர்வ சாதாரண போலீஸ் அதிகாரிகளின் போக்கில, மிருகநிலை குறைந்து மனிதப்பண்பு வளரும் என்று நம்புவதற்கில்லை. ஆங்கிலேயர்கள் இந்த அடாதச் செயலைச் செய்திருப்பார்களானால், இதற்குள், நமது தேசிய ஏடுகள், அந்தக் கொடுங் காட்சியின் பலபல விதமானப் படங்களைப் பிரசுரித்து, பகுதிபகுதியாகப் பலரைக்கொண்டு எழுதச் செய்து, காரசாரமான நீண்டதலையங்கங்களை தீட்டித் தக் காட்டும் தீ மூட்டி யிருக்கும். மூர்ச்சையடைந்த மாணவர், ஐவருமநாட்டு பற்றின்ஜ்வாலைகள் என்று போற்றிப்புகழப் பட்டிருப்பா.

ஆளவந்தார்களை அகற்ற அலை அலையாகக கிளம்பி இருக்கும ஆவேசப் பேச்சுகள. சட்டசபை உறுப்பினர் வீடுகளின் முன் விடுதலை வீரர்களின் 'சத்யாகிரகம்' நடைபெற்றவண்ணம இருந்திருக்கும். வெள்ளை கவானரைத திருமப அழைததுக கொள்ளுகிறீர்களா இல்லையா என்று அதட்டல் கிளம்பி இருக்கும் அடித் தொண்டையில இருந்து! இன்று, அவ்வளவுககும முற்றுப்புள்ளி—பெரிய அளவில!

'நம்ம சாககார்!' பொது மக்களை — மாணவர்களை — மாடுகளைப் போல நடத்தச் சுதந்திரம் பெற்றுவிட்டிருக்கிற 'நம்ம சாக்கார்!' நடக்கிறது!

போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரின்—உத்தியோக உயாவு சிலநாளைக்கு நிறுத்தப்படுகிறது, மாணவர்களை மிருகங்களை நடத்துவதுபோல நடத்தின அநீதிககு! சுராஜ்—உத—தௌலா, கலலறையிலிருந்து கொண்டே, 'களுக' என்று சிரித்து மகிழ்கிறா! தமது பரமபரை, இநத இருபதாம நூற்றாண்டிலும அழியாமல 'சிரஞ்சீவியாக' நீடித்துப் புகழ்பரப்பிஇருந்துவருகிறதே என்று! சுராஜ்—உத—தௌலா, உற்சாகத்தோடு உலாவி வருகிறார், வங்கத்தின் நகரங்களிலே—கலகத்தாத தெருககளிலே—காங்கிரஸ ஆளவந்தார்களின கதாப போர்வையோடு—காந்தியார் நாமாவளி பஜனையோடு!

9-9-49-ல, கலகத்தா பல்கலைக் கழக மாணவாகள், ஆர்ப்பாட்டம் செய்தனர். 105 மாணவர்கள் கைது செய்யப்பட்டு, ஓர் இரவு லால் பஜார மத்தியப் போலீஸ் கொட்டடியில அடைத்து வைதது, மறு நாள காலை, 30 நபர்களை மட்டும் ஏற்றிச் செலல வசதியுள்ள நான்கு போலீஸ் வானில், பாங்ஷால் தெருவில் உள்ள பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குக் கொண்டு வந்தனா விசாரணைக்கு. அந்த நான்கு வான்களில ஒன்றில் 30 நபர்களுக்குப் பதில், 40 மாணவர்களை அடைத்துக்கொண்டு வந்தனர், அந்த அக்கிரம நிகழ்ச்சியின் விவரம்இதுதான்.

ஏஜண்டுகள் தேவை

'மாலைமணி' விற்பனைசெய்ய கரூர், சாத்தூர் ஆகிய இரு ஊர்களுககுடிபாசிட் கட்டககூடிய ஏஜண்டுகள் தேவை.

மானேஜா: மாலைமணி

"மாலை மணி"

(திராவிடர தமிழ்த் தினசரி)

வருட சந்தா	15—0—0
6-மாத ,,	7—8—0
3-மாத ,,	3—12-0

மானேஜர்

தோட்டத் தொழில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தோட்டத் தொழிலாளர்களால், தங்கள் நிலையை உயர்த்திக் கொள்வதற்கான கிளர்ச்சி செய்ய முடியாது. கண்ணைக் கட்டிக் காட்டுக்கு அழைத்துச் செல்லுவது என்று பழமொழி கூறுவார்களே, அது, இந்தத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இன்றும் உண்மை உரை.

"காவிரி தென் பெண்ணை பாலாறு" எனும் கவின்மிகு ஆறுகள் பல ஓடிடும் தமிழகம், ஒரு வேளைச் சோறிடவும் முடியாமல் தூத்துகிறது, இலட்சக் கணக்கான ஏழைகளை, தேயிலை, காப்பி, ரப்பர் காடுகளுக்கு— சிலோனுக்கு, சயாமுக்கு, பிஜித் தீவுக்கு, கெட்டாவுக்கு, கண் காணாச் சீமைகளுக்கு!! கண்டும் தேளும், வண்டும் விஷப் பாம்பும், சேறும் அட்டைகளும் நிரம்பிய இந்தக் காடுகளிலே சென்று இரத்தம் கொட்டி, இவர்கள் வளர்க்கும், காப்பியும், தேயிலையும் ரப்பரும், இங்கு மட்டுமல்ல, உலகிலே பல் வேறு நாடுகளிலே, உற்சாகத்துக்கும் உயர் நாகரிகத் துக்கும் உபயோகப் பொருளாகி, முதலாளிகளின் இலாபத்தை மலையாக்குகின்றன! இந்திய பூபாகத்தில், சிறப்பாகத் திராவிடத்தில், இந்தத் தோட்டத் தொழில் மிகவும் வளம் பெற்று விட்டிருக்கிறது- ஏழையின் உழைப்பை உறிஞ்சி உறிஞ்சி ஓங்கி வளர்ந்து விட்டது-முதலாளிகள் கொழுத்துள்ளனர். தோட்டத் தொழிலாளர், பஞ்சமும் நோயும் கொண்டு, பாதி வாழ்வு வாழுகின்றனர். கால்களும் கைகளும் ஓய்ந்து ஒடிந்திடும் நிலை! காய்ந்த வயிறு! கவலை சூழ்ந்த வாழ்வு!

* * *

காடு விடுதலை பெற்றது-எனினும் இந்த, சொந்தக் கிடக்கும் மக்களை 'விடுவிக்க' சிறுவிரல் அசைப்பாரும் இல்லை. ஆலைகள் நகரங்களிலே உள்ளன-எனவே அங்குள்ள தொழிலாளர்கள், ஏதோ ஓரளவுக்கேனும் கிளர்ச்சி செய்ய முடிகிறது. தோட்டத் தொழிலாளர்களோ, காடுகளில் உள்ளனர்—கேட்பாரற்ற நிலையில். இவர்களின் எஜமானர்களோ பெரும்பாலும் வெள்ளை முதலாளிகள். இவர்களுக்கோ, உலக வல்லரசுகளுடன் தொடர்பு! உலக வல்லரசுகளோ, தேயிலையும் காப்பியும் ரப்பரும், மேலும் மேலும் தேவை என்று கேட்கும், போக்குடையன! அவர்கள் என்ன புரட்சிக்கவிஞர் போல, காப்பியையோ தேயிலையையோ பார்த்துக் கேட்கவா போகிறார்கள், "எத்தனை தோழர்கள் நித்தமும் இரத்தத்தைச் சொரிந்தனரோ உங்கள் வேரினிலே!" என்று. சுவையில் சொக்கிவிடுகிறார்கள்- இலாபத்தில் புரள்கிறார் முதலாளி! கொள்ளை இலாபம்பெறுவதற்கும், கிளர்ச்சிப்புயல்வீசாதபடி தடுத்துக் கொள்வதற்கும் வழி வகை பெற்று வளர்ந்துள்ள இந்த வெள்ளை முதலாளிகளை இன்னமும் விட்டுவைப்பது, விடுதலை பெற்ற இந்தியாவுக்கு வெட்கக்கேடானதாகும்! கவர்னரும் கமாண்டரும் விலகினர்- தோட்டத்துரைமார்களின் தர்பார் மட்டும் ஏன் இனியும் இருக்க வேண்டும்! காட்டு மதிப்பு எப்படி உயரும், வெளிநாட்டு முதலாளிகளிடம், நம் நாட்டவரை அடிமைகளாக்க வைத்திருக்கும் வரையில்! வெளிநாட்டு முதலாளிகள் இங்கு தங்கி தர்பார் நடத்தவும் அனுமதிக்கிறோம் - வெளிநாடுகளிலே நம்மவர் சென்று கூலிகளாகிச் சீரழிவதையும் அனுமதிக்கிறோம். கடலிற் செல்லும் கலத்திலும், விண்ணில் பறக்கும் விமானத்திலும், எமது விடுதலைக்கொடி பறக்கிறது பாரீர். தாயின்மணிக் கொடி பாரீர்! அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்! என்று பாடுகிறோம். பொருத்தமா!!

விடுதலை பெற்ற தன் விளைவை அனைவரும்-குறிப்பாகப் பாட்டாளிகள் உணரவேண்டுமானால், தோட்டத் துரைமார்களுக்குச் சீட்டுக்கொடுத்தனுப்பி யிருக்க வேண்டும்.

தனி அரசுரிமை பெற்ற நாட்டிலே, பெரும் பொருள் இலாபம் வரக்கூடியதும், பல்லாயிரவரின் உழைப்பைஉபயோகிப்பதுமான தொழில், வெளிநாட்டவரிடம் இருப்பது, கேவலம், கேடுபயப்பது, தன்மானத்துக்கும் இழுக்களிப்பதாகும்.

பிரிட்டன் நமக்குத்தரவேண்டிய கடன் தொகை பற்றி ஏற்பாடு செய்வதற்காக ஒரு குழு சென்ற ஆண்டு சீமை சென்றபோது, இந்தக் கடன் தொகையைப் பைசல் செய்வதற்கான பல வழிகளைப் பற்றி நிபுணர்கள் யோசனைகள் கூறினர் — அதிலே ஒன்று, வெள்ளையரிடமுள்ள தோட்டங்களை வாங்கிக்கொள்வது, அவர்களுக்கு, ஜெமீன்தார்களுக்குத் தருவதுபோல நஷ்டஈடு கொடுத்துவிட்டு, என்பதாகும். அதுவும், கேட்பாரற்றுப் போயிற்று —வெள்ளை முதலாளிகள் எப்போதும்போல தர்பார் செய்து வருகிறார்கள்.

இந்தக் கேவலம் ஒழிந்தாக வேண்டும்.

தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கைக் கொடுமையை நீக்க உடனடியாக முயற்சி எடுக்க வேண்டும்.

கொள்ளை இலாபமடிக்கும், துரைமார்கள், தொழிலாளருக்கு அதிகமாகக் கூலிதர வேண்டி நேரிடுகிறது என்றும், அதனால் உற்பத்திச் செலவு அதிகமாகி இலாபம் குறைகிறது என்றும் பொய்யுரை புகன்று நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்.

கிரிப்பித்ஸ் எனும் தோட்டத் தொழில் துரை, இது பற்றி, முகாரி பாடுகிறார்.

அமைச்சர்களோ, முதலாளிகளின் மூக்கு சிவந்துவிடுமோ என்ற அச்சத்தால், அழுதழுது தொழிலாளியின் கண் சிவந்தாலும், அக்கரையற்றுள்ளனர்.

கிரிப்பித்ஸ் போன்றுர்கள் பொய்யுரை புகலும் போது, தோட்டத் தொழிலாளரின் துயர்மிக்க வாழ்க்கையை எடுத்துக் காட்டி இடித்துரைக்கும் நெஞ்சுரம் இல்லை, மஞ்சள் பெட்டி மகான்களுக்கு.

உண்மையோ, தோட்டத் தொழிலாளி, மற்றத் தொழிலாளிகளைவிட, மிக மிக மோசமான நிலையில் இருக்கிறான் என்பதையே காட்டுகிறது.

தோட்டத்துரை, தொழிலாளருக்குக் தரப்படும் கூலி அதிகம் என்று கூறுகிறார். ஆனால் இந்திய சர்க்காரின் தொழிலாளர் பகுதிஆராய்ச்சி டைரக்டர் காரியாலயம் தரும் தகவலோ, தோட்டத் தொழிலாளரின், கூலி எவ்வளவு மோசமாக இருக்கிறதென்பதைக் காட்டுகிறது. தேயிலைத் தோட்டத் தொழிலாளரில், சராசரி மூன்று பேர் கொண்ட ஒரு குடும்பம் வாரத்தில்சராசரிபெறும்கூலி ரூ 11-13-1.- என்று கணக்கு தருகிறது.டைரக்டர்-இலாகா ரூ 11-11-7-செலவாகிறதாம். சராசரி ஒரு குடும்பத்துக்கு எதிர் பாராத செலவுகள், நோய் நொடி ஏற்படுவதால் வரும் செலவு இவைகளுக்குக் கடன் பட்டுக் குடும்பங்கள் கலங்குகின்றன. சராசரிக் கடன் 79 ரூபாய் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. அரை வயிறு கால் வயிறு என்று நிலை இருக்கிறது! கடன் கொட்டுகிறது! இதை மறைத்து, துரை புளுகுகிறார், கூலி, அதிகம் என்று, கூசாமல்—இதை அனுமதிக்கிறார்கள், ஏழை பங்காளர்களான அமைச்சர்கள்! ஏன்?

காப்பி தோட்டத்தில் பாடுபடும்தொழிலாளக் குடும்பச்சராசரி வாரமொன்றுக்கு ரூ 8-12-1 பெற்று, வாரத்தில், சராசரி ரூ. 11—11—7 செலவு செய்து தீர வேண்டிய நிலையினால் கடனில் சிக்கிக்கலங்குகிறது என்று சர்க்கார் வெளியிடும் தகவலே கூறுகிறது. ரப்பர் தோட்டத்திலே கிடைப்பது ரூ 8—15—4 —செலவு ரூ. 7—8—5 என்று கணக்கு இருக்கிறது.

இந்த நிலையிலுள்ள தொழிலாளர்கள், எவ்வளவு கொடுமையை அனுபவிக்கிறார்கள் என்பது எவருக்கும் விளங்கும்—நாடாள்வோர் களுக்கு மட்டும் விளங்குவதில்லை.

இந்தக் கேவலமான நிலையில் வாழ்க்கை நடத்த, பாட்டாளிகள், பிறந்த ஊரையும், உற்றார் பெற்றாரையும் பிரிந்துசெல்கிறார்கள், 'அட்டையும் அரவையும்' புரளும் காடுகளுக்கு இவர்கள் கொட்டிடும் இரத்தம், பவுன்களாக, டாலர்களாக மாறி, இலாபமாகக் குவிகிறது, முதலாளிகளிடம்.

சர்வதேசத் தொழிற்சங்கத்தார்,இந்தியாவிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றி, தகவல் தரும்படி இந்திய சர்க்காரைக் கேட்டுள்ளனர். இதற்கான, பதிலும் தயாராகிவிட்டதென்று, தொழிலாளர் கமிஷனர் தோழர் சி. ஜி. ரெட்டி அவர்கள் தெரிவித்திருக்கிறார். தோட்டத் தொழிலாளர்களின் கூலித்திட்டம், படிப்பு வசதி, சுகாதார வசதி ஆகியவை பற்றிய நிர்ணயமான தகவல்களை இந்திய சர்க்கார் திரட்டித் தந்திருப்பதாகத் தொழிலாளர் கமிஷனர் தெரிவிக்கிறார்.

சர்வ தேசத் தொழிற் சங்கத்திற்கு. தகவல் தருவது போதாது. தோட்டத் தொழிலைத் துரைமார்களிடமிருந்து கைப்பற்ற வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை, மனிதப் பண்பளவுக்கு உடனடியாக உயர்த்த வேண்டும்.

நெல்லை மாவட்டத் தோழர்களுக்கு

தூத்துக்குடி, செப், 21.—திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் குழு உறுப்பினரான தோழர் கே. வி. கே. சாமி கீழ்க்கண்ட அறிக்கையை நெல்லைமாவட்டத் தோழர்களுக்கு விடுக்கிறார் அது வருமாறு:—

"தோழர்களே! நமது இயக்கத்தில் ஏற்பட்ட சிக்கலின் பொருட்டு தடைபட்டுக் கிடந்த இயக்க வேலைகள் 17-9-49ல் சென்னையில் கழக முக்கியஸ்தர்கள் செய்த முடிவு நல்லதோர் ஏற்பாடாகும் என்பதை அனைவரும் உணர்வர்கள். "திராவிட முன்னேற்றக் கழகம்" அமைந்து விட்டது. எனவே திராவிடத் தோழர்கள் அனைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பங்கு கொண்டு தொடர்ந்து பணியாற்ற வேண்டுகிறேன்.

(1) ஒவ்வொரு ஊரிலும் உள்ள தலைமைத் திராவிடர் கழகங்களும் (திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்ற விரும்பும் கழகங்கள்) திராவிட முன்னேற்றக் கழகம் எனப் பெயரைத் தீர்மானம் மூலம் மாற்றி அமைத்துக் கொள்ளவும்.

(2) ஒரே ஊரில் கிளை திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர இதர இளைஞர் கழகம், வாலிபர் கழகம், வாசகசாலை ஆகியவை இருக்குமேயானால், பெயரை மாற்றத் தேவையில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறோம் என்று தீர்மானம் செய்து கொண்டாலே போதுமானது.

(3) திராவிட முன்னேற்றக் கழகத்தில்; முதலில் உறுப்பினர்களைச் சேர்த்து, அவர்களிலிருந்து பொறுப்பும, தகுதியும், திறமையும் உள்ளவர்களைப் பார்த்துத் தேர்ந்தெடுத்து, அவர்களில் ஒருவரை செயலாளராகவும், ஒருவரை நிதி உறுப்பினராகவும், ஒருவரை விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்து செயற்குழுவை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(4) மேற் கண்ட முறைப்படி கிளைக்கழகங்களை ஊர் தோறும் அமைத்து, 16—10—49 க்குள் எல்லா வேலைகளையும் முடித்து விட்டுத், தீர்மானங்களை மத்திய தலைமைக் கழகத்திற்கும், எனக்கும் அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

(5) 16—10—49-ம் நாளன்று நமது மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு ஊரிலும், அங்கே உள்ள பிரசாரகர்களை வைத்துக்கொண்டு, பொதுக்கூட்டமும், ஊர்வலமும், கொடியேற்று விழாவும் நடத்த வேண்டுகிறேன். கொடி மேல் பாதி கறுப்பாகவும், கீழ்ப்பாதி சிகப்பாகவும் இருக்க வேண்டும்.

திராவிடர் கழகம் உயிர் பெறுமா? உயிர் பெற்று எழும்புமா? எழுந்து உலாவுமா? உலாவிப் போதாவைப் பெறுமா? என்று கேலிச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்த ஆட்சியாளருக்கு, நாங்கள் சாகவில்லை, சிதறுண்டு அழிந்து போகவில்லை, இதோ வருகிறோம் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற திட்டத்துடன் என எடுத்துக் கூறுவதுடன், ஆட்சியாளர் திகைப்படையும் வண்ணம் 16-10-49-ல் துவக்க விழாவை நெல்லை மாவட்டமெங்கும் நடத்திக்காட்ட வேண்டுகிறேன். வணக்கம்

கே. வி. கே. சாமி

அமைப்புக் குழு உறுப்பினன் திராவிட முன்னேற்றக் கழகம்

குறிப்பு:—அங்கத்தினர் சேர்க்கும் ரசீது புத்தகங்களை விரைவில் அனுப்பிவைக்கிறேன். அது சம்பந்தமாகக் கடிதம் எழுதுவோர் எனக்கு எழுதவும்.

திராவிட முன்னேற்றக் கழகம்

சென்னை முத்தையாலுப் பேட்டை கிளை

24-9-49 சனி மாலை 6-மணிக்கு சென்னை முத்தியாலுப்பேட்டை திராவிடர் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் பவழக்காரத் தெரு, 147-இல்லத்தில் நடைபெற்றது. திரு. P. வீராகவன் தலைமைவகித்தார். வி. சி. ஜெயராமன், காஞ்சி மணிமொழியார், புலவர் செல்வக்கோ கூட்ட நோக்கத்தையும இயக்கத்தின் தற்கால நிலைமை எதிர்கால வேலை முறைகளை விளக்கினர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1. பெரியார் ஈ. வெ. ராவின் பொருந்தாத் திருமணத்தைக கண்டித்தும், பொருந்தாத் திருமணத்தைத் தவிர்க்கவேண்டுமெனக் கூறியவர்களை சதிகாரர்கள், சூழ்ச்சிக்காரர்கள் எனத்தாக்கி அறிக்கைகள் விட்டதைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. மேற்குறித்த காரணங்களால் பெரியார் தலைமையில் இனியும் பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் 'முத்தியாலுப்பேட்டை திராவிடர் கழகத்தை' முத்தியாலுப் பேட்டை திராவிட முன்னேற்றக் கழகம்' என மாற்றியமைத்து பணியாற்றுவது என முடிவு செய்யப்பட்டது.

3. முத்தியாலுப்பேட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தை மத்திய திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைப்பதென்றும்.

4. மத்தியகி, முன்னேற்றக்கழகத்தின் அமைப்பு முறைகள், சட்டதிட்டங்கள், கொள்கைகள், கொடி ஆகியவைகளை ஏற்றுக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

5. தோழர் காஞ்சி மணிமொழியார் செயலாளராகவும், வி.சி. செயராமன் பொருளாளராகவும், K. மாணிக்க சாமி விளம்பர உறுப்பினராகவும், புலவர் செல்வக்கோ P. வீராகவன், N. பஞ்சாட்சரம், சோதீஸ்வரன், டி. லோகநாதன், V. கபூர், A.R. சேஷாசலம், பத்மன் செல்லப்பன், இரா. குலசேகரன், மா. இளஞ்செழியன், அ. மு. சம்பந்தம் ஆகியோர் நிர்வாக உறுப்பினராகவும் ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

காஞ்சி. மணிமொழியார்
செயலாளர்.

அறிவிப்பு

ஏஜண்டு தோழர்கள் பலர் அதிகப்பிரதிகள் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார்கள். தங்கட்குத்தேவைப்படும் அதிகப்பிரதிகளுக்கு முன்பணம் அனுப்பினாலன்றி, அதிகப்பிரதிகள் அனுப்ப இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மானேஜர் : மாலைமணி.

அறிவிப்பு

ரெஜிஸ் மூட்டை பவுடர். மூட்டைப்பூச்சி [illegible] அப்பத் [illegible] 1-க்கு 8 [illegible] [illegible] மதுரை.

விற்பனைக்குத்தயார்

சென்னையில் முக்கியமான இடத்தில் [illegible] பிரஸ் விற்பனைக்குத்தயார் - இடைத்தியுடன் [illegible]

விலை ஏறக்குறைய 18,500

விபரங்களுக்கு:—

T. N. R.

c/o மாலை மணி

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street. Madras-1.